


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், இரண்டாம் பரிசு பெற்ற காவல் துறையின் சார்பில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை கூடுதல் ஆணையர் என்.கண்ணன் ஆகியோரிடம் கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற பள்ளி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற கொளத்தூர், எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கு கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பள்ளி ஆசிரியர் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், மூன்றாம் பரிசு பெற்ற இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இணை ஆணையர் ச.இலட்சுமணன் ஆகியோரிடம் கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற கல்லூரி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற இராணி மேரி கல்லூரி மாணவியர்களுக்கு கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், கல்லூரி பேராசிரியர் ஆகியோர் உள்ளனர்.

### விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்

# நெல்லின் ஈரப்பத சதவிகிதத்தை உயர்த்திடுவீர்!

## ஒன்றியக் குழுவிடம் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வலியுறுத்தினார்!

கடலூர், ஜன.28-

கடலூர் மாவட்டம் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பத சதவீதத்தை உயர்த்துவது குறித்து மத்திய குழுவினரிடம் வலியுறுத்தினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் (24.01.2025) அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் மத்திய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சகத்தின் உதவி இயக்குனர்கள் நவீன், திருமதி ப்ரீத்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் ராகுல், அபிஷேக் பாண்டே, FCI தரக்கட்டுப்பாடு மேலாளர் பாஸ்கர் குமார் ஆகியோர்களிடம் விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யும் நெல்லின் ஈரப்பதம் அளவை உயர்த்துவது குறித்து வலியுறுத்தினார்.



சந்திப்பின் போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக மேலாண்மை இயக்குனர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

சந்திப்பின் போது வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவிக்கையில், கடலூர் மாவட்டத்தில் கடந்த 2024 ஆண்டு டிசம்பர் மாதத்தில் இயல்பாக கிடைக்க வேண்டிய மழை அளவை விட அதிகமழை பெய்துள்ளது. இது சராசரி மழை அளவைவிட 114 சதவீதம் அதிகம் ஆகும்.

மேலும், கடந்த 30 நாட்களாக வெப்பநிலை சுமார் 22 டிகிரி செல்சியஸ் முதல் 29 டிகிரி செல்சியஸ் என்ற அளவிலும், காற்றின் ஈரப்பதம் சுமார் 88 சதவீதம் முதல் 92 சதவீதம் என்ற அளவிலும், காலை வேலைகளில் மிகுந்த பனி மூட்டத்துடன் வானிலை நிலவி வருகிறது.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் வரையிலான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். காற்றின் ஈரப்பதம் அதிகமாக உள்ளதால் நிர்ணயிக்கப் பட்ட அளவான 17 சதவீத ஈரப்பதத்துடன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகளால் நெல் கொடுக்க இயலாத நிலை உள்ளது.

இதன் காரணமாக பல்வேறு விவசாய அமைப்புகள் மற்றும் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லினை கொள்முதல் செய்திட வேண்டும் என கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு வலியுறுத்தியதன் பேரில் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு இன்றைய தினம் கடலூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் ஈரப்பதம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

கனமழை காரணமாக விவசாயிகளுக்கு நடப்பு பருவத்தில் ஏற்பட்ட பாதிப்புகளால் அறுவடையின் போது விளைச்சல் குறைவாக உள்ளதாலும், காற்றின் ஈரப்பதம் அதிகரித்துள்ளதாலும் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று நெல் ஈரப்பதத்தின் அளவை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி தர மத்திய நிபுணர் குழுவினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# 34 இந்திய மீனவர்கள் - மீன்பிடிப் படகுகளை விடுவித்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜன.28-**

**இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்கள் தனுஷ்கோடி அருகே 25.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (26.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 25.1.2025 அன்று ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை (தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் மற்றும் கேரளாவைச் சேர்ந்த 2 மீனவர்கள்) தனுஷ்கோடி அருகே அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்று கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக்கப்படும் சம்பவங்கள், கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே பதட்டத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதோடு அவர்களது எதிர்காலத்தை நிச்சயமற்றதாகவும், இருண்டதாகவும் ஆக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே நமது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்க உறுதியான தூதரக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கவும் தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான அவசர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கட்டில் இடது புற கால்வாயிலிருந்து பாசனத்திற்காக பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், செங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.